# தமிழ்நாடு தகவல் ஆணையம்

எண்.19, அரசு பண்ணை இல்லம், பேர்ன்பேட்டை, (Pension Pay Office பின்புறம்),
நந்தனம், சென்னை–600 035. தொலைபேசி எண்.044–2951 5590

**முன்னிலை**

**திரு.பி.தாமரைக் கண்ணன்,இ.கா.ப.(ஓய்வு),**
**மாநில தகவல் ஆணையர்**

*****

**வழக்கு எண். SA 1967/விசாரணை/E/2023**

திரு.T.ராதாகிருஷ்ணன் -- மேல்முறையீட்டாளர்

*/எதிர்/*

பொதுத் தகவல் அலுவலர்/
துணை வட்டார வளர்ச்சி அலுவலர்(ஊராட்சிகள்)
வட்டார வளர்ச்சி அலுவலகம்,
ரெட்டியார்சத்திரம், திண்டுக்கல் மாவட்டம்-624 622. .. பொது அதிகார அமைப்பு

******

**இறுதி ஆணை**

இவ்வழக்கின் மீது இவ்வாணையத்தால் 27.01.2026 அன்று விசாரணை மேற்கொள்ளப்பட்டு பிறப்பிக்கப்பட்ட உத்தரவின் அடிப்படையில், ரெட்டியார்சத்திரம் துணை வட்டார வளர்ச்சி அலுவலர்(ஊராட்சிகள்)/பொதுத் தகவல் அலுவலர் திரு.த.சூர்யகுமார் 26.03.2026 அன்று ஆணையத்தில் நேரில் ஆஜராகி, ஆணையத்தின் 27.01.2026 தேதியிட்ட உத்தரவு பத்தி 6(1)-ன்படி, மேல்முறையீட்டாளருக்கு இனம் 1-க்கான தகவல்கள் உரிய ஆவண நகல்களை இணைத்து 18.03.2026 தேதியிட்ட கடிதத்தின் வாயிலாக 25.03.2026 அன்று பதிவஞ்சலில் அனுப்பி வைக்கப்பட்டுள்ளதாக தெரிவித்து, வழங்கப்பட்ட தகவலின் நகல் மற்றும் மேல்முறையீட்டாளருக்கு பதிவஞ்சலில் அனுப்பியதற்கான அஞ்சலக ரசீதின் நகல் ஆகியவற்றை ஆணையத்தின் முன் தாக்கல் செய்தார். இதனை ஆணையம் பதிவு செய்கிறது.

2. இவ்வாணையத்தின் 27.01.2026 தேதியிட்ட உத்தரவு பத்தி 6(2) தொடர்பாக ரெட்டியார்சத்திரம் வட்டார வளர்ச்சி அலுவலர்(கி.ஊ.)/மேல்முறையீட்டு அலுவலர் 25.03.2026 தேதியிட்ட அறிக்கையில், முன்னாள் பொதுத் தகவல் அலுவலரின் 13.03.2026 தேதியிட்ட எழுத்துமூலமான விளக்கத்தை இணைத்து சமர்ப்பித்துள்ளார். முன்னாள் பொதுத் தகவல் அலுவலர் 13.03.2026 தேதியிட்ட தனது விளக்கத்தில், மேல்முறையீட்டாளர் தகவல் கோரிய காலகட்டத்தில், தான் செட்டியார்சத்திரத்தில் ஊராட்சி ஒன்றிய அலுவலகத்தில் பல்வேறு திட்டப் பணிகள் செயலாற்றுவது தொடர்பாக நாள்தோறும் இரண்டு அல்லது மூன்று காணொளிக் கூட்டங்களில் நடைபெற்றதற்கு அறிக்கை தயார் செய்திடவே பெரும்பகுதியான நேரத்தை செலவிட்டதாலும், தகவல் அறியும் உரிமைச் சட்ட மனுக்களுக்காக தனியே உதவியாளர் இல்லாத நிலையிலும், நெருக்கடியான சூழ்நிலையிலும், மேல்முறையீட்டாளரின் 19.10.2022 நாளிட்ட மனுவிற்கு கிராம சபைக் கூட்டம் நடைபெறவில்லை என்று தட்டச்சு செய்தமையை உறுதி செய்யாமல் இருக்க நேரிட்டது என்றும், இத்தவறானது கவனக்குறைவாக ஏற்பட்டதே அன்றி

மேல்முறையீட்டாளருக்கு தகவல் வழங்கக்கூடாது என்ற நோக்கில் செயல்படவில்லை என்றும், இனி வருங்காலங்களில் இதுபோன்ற தவறு இனி நிகழாது என்றும் தெரிவித்துள்ளதை ஏற்று, அவர் மீதான நடவடிக்கையை இவ்வாணையம் இத்துடன் கைவிடுகிறது.

3. மேல்முறையீட்டாளர் இவ்வாணையத்திற்கு அனுப்பியுள்ள கடிதத்தில், பொதுத் தகவல் அலுவலர் வழங்கியுள்ள தீர்மானத்தில் அன்றைய தினம் தனி அலுவலரின் கையொப்பம் இல்லை என்றும், தேதியும் குறிப்பிடப்படவில்லை என்றும், சான்றிட்டு வழங்கப்படவில்லை என்றும், மூன்று தீர்மான நகல்களில் பொதுமக்கள் கையொப்பம் செய்த தீர்மான நகல் வழங்கப்படவில்லை என்றும் தெரிவித்துள்ளார். இதனை ஆணையம் பதிவு செய்கிறது.

4. ஆகவே இவ்வாணையத்தால் கீழ்க்கண்ட உத்தரவுகள் பிறப்பிக்கப்படுகின்றன:-

1. இவ்வாணை கிடைக்கப் பெற்ற 15 தினங்களுக்குள், மேல்முறையீட்டாளருக்கு மீண்டும் 18.03.2026 தேதியிட்ட இணைத்து அனுப்பப்பட்ட தீர்மான நகல்களையும், இவ்வழக்கில் கோரியுள்ள தகவல்கள் தொடர்பாக பொது அதிகார அமைப்பின் பராமரிப்பில் உள்ள ஆவணங்களின் நகல்களையும் ஒவ்வொரு பக்கத்திலும் சான்றிட்டு *மேல்முறையீட்டாளருக்கு சட்டப்பிரிவு 7(6)-ன் கீழ் கட்டணமின்றி ஒப்புகை அட்டையுடன் கூடிய பதிவஞ்சலில் அனுப்பி வைத்து, மேல்முறையீட்டாளர் அதனை பெற்று ஏற்பளிப்பு செய்த ஒப்புகை அட்டையின் நகலை இணைத்து ஒரு அறிக்கையாக* ***இவ்வாணையத்தில் 15.05.2026 அன்று நேரில் ஆஜராகி தவறாமல் சமர்ப்பிக்குமாறு பொதுத் தகவல் அலுவலருக்கு இவ்வாணையம் உத்தரவிடுகிறது.***

2. மேல்முறையீட்டாளரின் 19.10.2022 தேதியிட்ட சட்டப்பிரிவு மனுவிற்கு தற்போது தான் முழுமையான தகவல்கள் வழங்கப்பட்டுள்ளதால், மேல்முறையீட்டாளருக்கு ஏற்பட்ட மனஉளைச்சலுக்கு நஷ்டஈடாக *மேல்முறையீட்டாளருக்கு சட்டப்பிரிவு 19(8)(b)-ன் கீழ் நஷ்டஈடாக ரூ.5,000/- (ரூபாய் ஐந்தாயிரம் மட்டும்) பொது அதிகார அமைப்பு வழங்கி, அதனை மேல்முறையீட்டாளர் பெற்று ஏற்பளிப்பு செய்த விபரத்தை அறிக்கையாக* ***இவ்வாணையத்தில் 15.05.2026 அன்று பொதுத் தகவல் அலுவலர் மூலம் நேரில் சமர்ப்பிக்குமாறு ரெட்டியார்சத்திரம் வட்டார வளர்ச்சி அலுவலர்(கி.ஊ.)/ மேல்முறையீட்டு அலுவலருக்கு இவ்வாணையம் உத்தரவிடுகிறது.***

**ஆணை நாள்: 09.04.2026** **ஒம்/-.பி.தாமரைக் கண்ணன்,**
**மாநில தகவல் ஆணையர்**

**(ஆணையத்தின் ஆணைப்படி)**

**உதவிப் பதிவாளர்**

**வழக்கு எண். SA 1967/விசாரணை/E/2023**

பெறுநர்
மேல்முறையீட்டு அலுவலர்/வட்டார வளர்ச்சி அலுவலர்(கிராம ஊராட்சிகள்)
வட்டார வளர்ச்சி அலுவலகம்,
ரெட்டியார்சத்திரம், திண்டுக்கல் மாவட்டம்-624 622.

மேல்முறையீட்டு அலுவலர்/வட்டார வளர்ச்சி அலுவலர்(கி,ஊ,), ரெட்டியார்சத்திரம் மூலமாக:-
பொதுத் தகவல் அலுவலர்/துணை வட்டார வளர்ச்சி அலுவலர்(ஊராட்சிகள்)
ரெட்டியார்சத்திரம் (21/06/2023 தேதியில்)

பொதுத் தகவல் அலுவலர்/துணை வட்டார வளர்ச்சி அலுவலர்(ஊராட்சிகள்)
வட்டார வளர்ச்சி அலுவலகம்,
ரெட்டியார்சத்திரம், திண்டுக்கல் மாவட்டம்-624 622.

திரு.T.ராதாகிருஷ்ணன்
வார்டு எண்.4, K.புதுக்கோட்டை (அஞ்சல்),
ரெட்டியார்சத்திரம் (வழி),
திண்டுக்கல் மேற்கு, திண்டுக்கல் மாவட்டம்-624 622.

Copy to: File

RJ/PS 10.4